# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2465/21 - 2025 දෙසැම්බර් මස 06 වැනි සෙනසුරාදා - 2025.12.06

2465/21 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/GFG/L&L/5/137.
காணி அமைச்சின் கோவை இல.: 4-3/24/2021/J/253.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணி யிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தில் காலி கடவத்சதர பிரதேச செயலகப் பிரிவில் மடவலமுல்ல தெற்கு கிராமத்தில் இல. 98, மடவலமுல்ல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நில அளவை யாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 810023, வலய இல. 03, தாள் இல. 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் பெயர்களால் எல்லைகளைக் கொண்டமைந்துள்ள காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 117**
காணியின் பெயர்: ஹயின்ஸ் பர்க் அல்லது கைனோஸ் பர்க் அல்லது ஹயின்ஸ் தோட்டம்; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: இல. 6/1, பெயார்வே வயோ திபர் இல்லம், மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, நுகதுவ காலியில் வசிக்கும் ரம்யா அஸ்ரா, அம்ப வத்த வெலன்தாவ; விஸ்தீரணம்: 0.3658 ஹெக்ட யார்.

**துண்டு இல. 118**
காணியின் பெயர்: ஹயின்ஸ் பர்க் அல்லது கைனோஸ் பர்க் அல்லது ஹயின்ஸ் தோட்டம்; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: இல. 77/1A, ஸ்ரீ ஹேமானந்த மாவத்தை, படகன்வில காலியில் வசிக்கும் டபிள்யூ. எச். யூ. சுதர்மன் மற்றும் டபிள்யூ. எச். ரமணி

1A - G 45839 — 08 (2025/12)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

வேவெல்வல; விஸ்தீரணம்: 0.3510 ஹெக்டயார்.

**துண்டு இல. 119**

காணியின் பெயர்: ஹயின்ஸ் பர்க் அல்லது கைனோஸ் பர்க் அல்லது ஹயின்ஸ் தோட்டம்; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: இல. 83/1, யூ. தர்மபால மாவத்தை, கொழும்பு 03 இல் வசிக்கும் ஹேவகே அஜந்த அம்பவத்த; விஸ்தீரணம்: 0.4214 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2026 ஆம் ஆண்டு தை மாதம் 12 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு காலி கடவத்சதர பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத் தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எல். என். பியுமலி லியனகே,
பிரதேச செயலாளர்,
காலி கடவத்சதர.

பிரதேச செயலகம்,
காலி கடவத்சதர,
2025, நவெம்பர் 25.

EOG 12 - 0022